கொடைக்கானல் நகராட்சி

2018ம் ஆண்டு மார்ச் மாதம் 9ம் நாள் (9.03.2018) வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

முன்னிலை: ரா.முருகேசன், M.A.,M.Phil.,B.L.,P.G.D.P.M.,A.P.G.D.U.M.,
தனி அலுவலர்.

மன்றப் பொருள்

1) கொடைக்கானல் நகராட்சி ஆணையாளர், திரு.ரா.முருகேசன் அவர்களின் பிப்ரவரி –2018ம் (15.02.2018 முதல் 28.02.2018) மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.632/2018/சி1).

| | |
|---|---|
| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 334, நாள். 09.03.2018. |
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | பதிவு செய்யப்படுகிறது. |

*******

2) இந்நகராட்சிக்குட்பட்ட அண்ணாசாலையில் உள்ள முதலியார்புரம் முதல் தெருவில் நகராட்சியால் புதிதாக கட்டப்பட்டுள்ள தண்ணீர் தொட்டியின் கீழ் பகுதியில் இரண்டு கடைகள் (1 மற்றும் 2) பயன்பாட்டு உரிமத்திற்கு 28.02.2018ம் தேதி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு கீழ் கண்டவாறு கலந்து கொண்டவர்களின் விபரம் கடை எண்.1 மட்டும்.

| வ. எண் | குத்தகை இனம் | பொது ஏலம் கோரியவர்கள் | ஒப்பந்தப்புள்ளி கோரியவர் | மாதம் ஒன்றுக்கு வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|---|
| | அண்ணாசாலையில் உள்ள முதலியார்புரம் முதல் தெருவில் நகராட்சியால் புதிதாக கட்டப்பட்டுள்ள தண்ணீர் தொட்டியின் கீழ்பகுதியில் இரண்டு கடைகள் ( 1 மற்றும் 2) பயன்பாட்டு உரிமம். | திரு.K.செந்தில் குமார், த/பெ. M.கிருஷ்ணன், 98/398 A, 1 A, அன்னை தெரசா நகர், பர்ன்ஹில் ரோடு, கொடைக்கானல். | ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை. | ரூ.7000/– |
| | | திரு.K.கார்த்திக், த/பெ.லேட். M.கிருஷ்ணன், இந்திரா நகர், ஆனந்தகிரி 4வது தெரு, கொடைக்கானல். | | ரூ.7200/– |

மேற்கண்ட கடை எண்.1–ற்க்கு மட்டும் திரு. K.கார்த்திக், ஆனந்தகிரி 4வது தெரு, இந்திரா நகர், கொடைக்கானல் என்பவர் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வித் தொகை ரூ.7200/–க்கு கோரியுள்ளார். ஒப்பந்தப்புள்ளிக்கு யாரும் முன்வரவில்லை. மேற்கண்டவாறு பெறப்பட்ட ஏலம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : உயர்ந்தபட்ச ஏலத் தொகையான திரு. K.கார்த்திக், S/o.லேட்.M.கிருஷ்ணன் என்பவரின் உயர்ந்தபட்ச எலத் தொகையான ரூ.7200/–ஐ மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1759/2017/A3)

| | |
|---|---|
| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 335, நாள். 09.03.2018. |
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது. |

*******

3) கொடைக்கானல் நகராட்சிக்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.4795/2017/அ5, நாள்.25.01.2018ன்படி, கொடைக்கானல் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி

மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்ச த்தில்) |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | கொடைக்கானல் நகராட்சி 14வது வார்டு தந்தி மேடு பகுதியில் சிறுபாலத்துடன் கூடிய தாங்கு சுவர் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல். | 10.00 |
| 2 | கொடைக்கானல் நகராட்சி 5வது வார்டில் குறுக்குச் சாலை அமைத்தல் | 5.00 |
| 3 | கொடைக்கானல் நகராட்சி 13வது வார்டு ஆனந்தகிரி 2வது தெரு, ஸ்ரீ பெரியமாரியம்மன் கோவில் அருகில் சமுதாயக் கூடம் கட்டுதல். | 20.00 |

அலுவலக குறிப்பு. மன்றம் பதிவு செய்யலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **336, நாள். 09.03.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **பதிவு செய்யப்படுகிறது.** |

*******

4) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான குப்பைக்கிடங்கில் திடக்கழிவு மேலாண்மை தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் குப்பை பிரித்தெடுக்கும் இயந்திரம் நிறுவும் பணிக்கு தேவையான மின் இணைப்பு வழங்கிட தொகை ரூ.23,550/– செலுத்தக் கோரி உதவி மின் பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி பகிர்மான கழகம், கொடைக்கானல் அவர்களின் கடிதம் உமிபொ/நகி/பொ/வ.ஆ/அ/எண்.011/2018, நாள்.07.02.2018ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **337, நாள். 09.03.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.8488/2017/ஊ.வ.8, நாள்.21.02.2018ன்படி, கொடைக்கானல் நகராட்சிக்குட்பட்ட பழுதடைந்த சாலைகளான, செட்டியார் பார்க் அருகில், வி.ஜி.பி.சாலை, கல்லுக்குழி சாலை, பாம்பார்புரம் சாலை, பேரிபால்ஸ் சாலை, சிவனடி ரோடு, அப்பர்லேக் ரோடு மற்றும் ஆனந்தகிரி முதல் தெரு ஆகிய 8 சாலைகளை தார் சாலை மராமத்து (Patch works) பணி ரூ.50.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள சுங்கநிதியின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.1222/2017/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **338, நாள். 09.03.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **பதிவு செய்யப்படுகிறது.** |

*******

6) இந்நகராட்சியின் நிர்வாகத் துறையின் அனைத்து அலுவலர்களுக்குமான தொலை தொடர்வு கையிடைபேசி எண்.7397396280 என்ற எண்ணிட்ட சிம்கார்டு ஒன்று கொடைக்கானல் நகராட்சி ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட விபரத்திற்கு அலுவல் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்ட சிம்கார்டை உபயோகத்தில் கொண்டு வர செல்போன் ஒன்று தேவைப்படுகிறது.

நவீன தரமான சுமார்ட் செல்போன் ஒன்று உள்ளூரில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தரிடமிருந்து கொள்முதல் செய்து சொத்தாக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது. மேற்கண்ட கையிடை பேசி உபகரணம் விலைக்கு வாங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.20,000/-ஐ (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. நிர்வாக நலன் கருதி அலுவல் பயன்பாட்டிற்காக உள்ளூரில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தாரிடமிருந்து சுமார்ட் செல்போன் விலைக்கு வாங்கிக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது மக்கள் தங்களின் தேவைகளையும் குறைகளையும் உடனுக்குடன் ஆணையரின் கவனத்திற்கு தெரிவிக்கும் வகையில் சென்போன் ஒன்று நகராட்சிக்கு சொந்தமாக வாங்க வேண்டியதன் அவசர அவசியத்தை முன்னிட்டு, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மன்றத்தின் தனி அலுவலரின் முன் அனமதி பெற்று உள்ளூரில் உள்ள ரீமாஸ் செல் சிட்டி என்னும் செல்போன் விநியோகஸ்தரிடமிருந்து செல்போன் விலைக்கு வாங்கியமைக்கும், அதற்கான பட்டியல் செலவு ரூ.19,847/-க்கு உரிய செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.655/2018/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **339, நாள். 09.03.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **1.அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.**<br>**1.அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.** |

*******

7) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட குத்தகை இனங்களை 2018-2019 முதல் 2020-2021ம் ஆண்டு வரை கட்டணம் வசூலிக்கும் உரிமைக்கு 01.03.2018ம் தேதி மறு பொது ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள உயர்ந்தபட்ச ஏலத்தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் தொகை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | திருவாளர்கள் | மறு பொது ஏலம் தொகை | மறு ஒப்பந்தப்புள்ளி தொகை | உச்ச கேள்வி ரூபாய். |
|---|---|---|---|---|---|
| | கவி தியாகராஜர் சாலையில் உள்ள நகராட்சி வாரச் சந்தையில் நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | திரு. P.சந்திரசேகரன், த/பெ. பெருமாள், கம்பளிநாடார் தெரு, தேவதானபட்டி, தேனி மாவட்டம். | ரூ.7,05,000/- | -- | ரூ.7,11,111/- |
| | | திரு. சந்திரசேகரன், த/பெ. பெருமாள், கம்பளிநாடார் தெரு, தேவதானபட்டி, தேனி மாவட்டம். | -- | ரூ.7,11,111/- | |

அலுவலக குறிப்பு : மேற்கண்ட குத்தகை இனத்திற்கு திரு. P.சந்திரசேகரன், என்பவரின் அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.7,11,111/- கடந்த மூன்றாண்டு சராசரி தொகை ரூ.5,35,926/- மற்றும் கடந்த ஆண்டு ஏலத் தொகை ரூ.5,10,000/-ஐ விட கூடுதலாக உள்ளதாலும் அன்னாரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகையினை ஏற்று மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும் நடைமுறையில் உள்ள விதி முறைகளின்படி சேவை வரியாக அன்னாரிடமிருந்து வசூல் செய்து சேவை வரி செலுத்தவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (ந.க.எண்.789/2018/A3)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **340, நாள். 09.03.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **ஒப்புதல் அளிக்கப்படுகிறது.** |

8) இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட குத்தகை இனங்களை 2018-2019 முதல் 2020-2021ம் ஆண்டு வரை கட்டணம் வசூலிக்கும் உரிமைக்கு 01.03.2018ம் தேதி மறு பொது ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளிகள்

கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள உயர்ந்தபட்ச ஏலத் தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் தொகை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | திருவாளர்கள் | மறு பொது ஏலம் தொகை | மறு ஒப்பந்தப்புள்ளி தொகை | உச்ச கேள்வி ரூபாய். |
|---|---|---|---|---|---|
| | கோக்கர்ஸ்வாக் பகுதியில் இயற்கை எழில் காட்சிகளை கண்டு களிக்க நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 1) திரு. M.ரவி, S/o.முத்து தேவர், 41/10-F, புது அக்ரஹாரம், கிழக்கு கோவிந்தாபுரம், திண்டுக்கல். | ரூ.91,21,000/– | –– | ரூ.91,21,000/– |
| | | 2) திரு.P.சுரேஷ், S/o.பெருமாள் தேவர், 24/33, லட்சுமி சுந்தரம் காலனி, திண்டுக்கல். | ரூ.91,05,000/– | –– | |
| | | 3)திரு.M.A.முருகையா, 7/26, அய்யனன்தெரு, போடிநாயக்கனூர் தெரு, தேனி மாவட்டம். | –– | ரூ.62,00,000/– | |
| | | 4)திரு.S.செபாஸ்டின் தேவராஜ், 23/18, 100A உட்காட் காம்பவுண்டு, கொடைக்கானல். | –– | ரூ.62,00,000/– | |

<u>அலுவலக குறிப்பு</u> : மேற்கண்ட குத்தகை இனத்திற்கு திரு. M.ரவி என்பவரின் அதிகபட்ச ஏலக்கேள்வித் தொகை ரூ.91,21,000/– கடந்த மூன்றாண்டு சராசரி தொகை ரூ.48,89,528/– மற்றும் கடந்த ஆண்டு ஏலத் தொகை ரூ.46,53,000/–ஐ விட கூடுதலாக உள்ளதாலும் அன்னாரின் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வியினை ஏற்று மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும் நடைமுறையில் உள்ள விதி முறைகளின்படி சேவை வரியாக அன்னாரிடமிருந்து வசூல் செய்து சேவை வரி செலுத்தவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (ந.க.எண்.788/2018/A3)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **341, நாள். 09.03.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.** |

*******

9) இந்நகராட்சிக்கு 2017–18ம் ஆண்டிற்கு காகிதங்கள் கணினி அச்சு இயந்திரங்களுக்கான டோனர்கள், பதிவேடுகள் உள்ளிட்ட இதர எழுது பொருட்கள் வாங்கிக் கொள்ள இந்நகர் மன்றம் ரூ.17.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ள தொகையில் ரூ.15,49,154/– செலவாகியுள்ளது. மேலும் டோனர் மற்றும் காகிதங்கள் எழுது பொருள்கள், புத்தகங்கள் படிவங்கள் தேவைபடுவதால் ரூ.5.00 லட்சத்திற்கு அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: தமிழ்நாடு அரசின் அரசாணை நிலை எண்.283, நிதி (BPE) துறை, நாள்.18.06.1998–ன்படி அரசு கூட்டுறவு நிறுவனங்களில் ஒப்பந்தப்புள்ளி / விலைப்புள்ளி கோராமல் நேரடியாக கொள்முதல் செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால் இந்நகராட்சிக்கு தேவையான எழுது பொருட்களை அரசு கூட்டுறவு நிறுவனமான திண்டுக்கல் பிரிண்ட் சர்வ் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்து கொள்ளவும், செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **342, நாள். 09.03.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/–ரா.முருகேசன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.